
# பனிமலை முகடுகளும் பள்ளத்தாக்குகளும்

– இரா. இளங்குமரனார்



# பனிமலை முகடுகளும் பள்ளத்தாக்குகளும்

இரா. இளங்குமரனார்

**திருவள்ளுவர் தவச்சாலை**
திருவளர்குடி (அல்லூர்)
திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 620 101
தொலைப் பேசி 0431-2685328

## நூற்குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | பனிமலை முகடுகளும் பள்ளத்தாக்குகளும் |
| ஆசிரியர் | இரா. இளங்குமரன் |
| மொழி | தமிழ் |
| பொருள் | வரலாறு |
| பதிப்பு | முதற்பதிப்பு - சூலை 2012 |
| பக்கம் | 60 |
| எழுத்து | 12 புள்ளி |
| தாள் | 18.6 வெள்ளை மேப்லித்தோ |
| அளவு | 1/16 கிரெளன் |
| படிகள் | 1000 |
| விலை | உருபா.25 |
| உரிமை | ஆசிரியர்க்கு |
| வெளியீடு | திருவரங்கம்<br>அழகம்மாள் - கந்தசாமியர் அறக்கட்டளை. |
| நூலாக்கம் | "தி பிரிண்டிங் அவுசு"<br>திருச்சி - 23 |

நூல் கிடைக்குமிடம்:

- **திருவள்ளுவர் தவச்சாலை**
  அல்லூர் - 620 101, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
  தொலைப்பேசி எண் : 0431 - 2685328

- **திருவரங்கம்**
  **அழகம்மாள் - கந்தசாமியர் அறக்கட்டளை.**
  13, இராசாசி தெரு, அரங்க நகர்
  திருவரங்கம். 0431-2430190

# பனிமலை முகடுகளும் பள்ளத்தாக்குகளும்

முன்னுரை

தமிழ் மொழியின் தோற்றம், அமைப்பு, தொல்காப்பியம், திருக்குறள், சங்க இலக்கியம், பிற்கால இலக்கியம், தமிழ் வளம் காத்த வண்மையர், பண்பாட்டு நலம், தொடர்பறா வளர்நிலை, செய்யுள் வழக்கு, மக்கள் வழக்கு - ஆயவை போற்றப் படுதல், பல்துறைத் தொண்டு, கலைவளர்ச்சி இன்னன பலவும் - இக்குறுஞ் சுவடியில் சுட்டப் படுகின்றன.

அனைத்தும் விரிவாக்கம் விளக்கம் உடையவை. எனினும், சுட்டும் அளவில் நிற்றல், கற்பார் அறிந்தவை என்றும், அறிய வேண்டித் தேடித் காண்பார் என்றும் எண்ணிய எண்ணத்தின் விளைவேயாம். தமிழ்ப்பற்றுடையார் ஆர்வலர் ஆயோர் அறியாச் செய்திகள் அல்ல என்று எண்ணியதும் ஆம்.

இத்தனை பனிமலை முகடுகளின், தமிழாக்கப் பணிகளும் பழுதுபடாமல் மேலும் மேலும் வளர்க்கப் பட்டிருந்தால், இற்றைத் தமிழ்நிலையும் தமிழர் நிலையும் தமிழக நிலையும் இன்று கொண்டுள்ள இழிமைக்கும் இழப்புக்கும் தொடர்ந்த அழிப்புக்கும் ஆட்படலாகி இருக்குமா? அவ்வாறு ஆகாமல் போக்கிய பள்ளத்தாக்குகள் அழுத்திய புதைகுழிகள் - ஆழ்குழாய் அமிழ்வுகள்- எவை எவை என்பது

வெளிப்படத் தோன்றும்! எண்ணுவார் எண்ணத்தில் பளிச்சிடும்! தமிழர் உய்ய வழி என்ன?

தமிழர் தமிழராக வாழ்தல் முதல் நிலை!

தமிழரே தமிழ்க் கேடராய் இராமையும், தமிழ்க் கேடராய் இருப்பார்க்குத் துணை போகாமையும், தம்முள் சிறு சிறு குறைகள் கண்டும், தம் நலம் கொண்டு பிளந்து பிரிந்து நின்று பகை வெல்ல அல்லது மாற்றான் மணிமுடி சூடியிருக்கச் செய்யாமையும் வேண்டின், தமிழர் ஒன்றாதல் வேண்டும் என்னும் ஒன்றேயன்றி வேறு அன்றாம்.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா"

என்பதும்,

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"

என்பதும்,

"மாற்றானுக்கு இடம் கொடேல்"

என்பதும் இற்றை நாள் கடைப்பிடிகளாகத் தமிழர் கொள்ள வேண்டிய மும்மணிகளாம்!

முகடுகளை நோக்கி விழிப்போடும் உறுதியோடும் நின்று, பள்ளத்தாக்குகளை நோக்கினால், "எங்கேநிற்க வேண்டியவர்கள், எங்கே நெளி புழுவாகக் கிடக்கிறோம்" என்பது தெளிவாம்.

சுட்டப்பட்டவர்கள் சிலர்க்கு மறுபக்கம் - மாறுபக்கம் என்பவையும் உண்டு! ஆனால்,

குறிக்கோள் நோக்கி அல்லது குறிநோக்கிச் செல்பவன், உரிய குறியை அன்றி ஒட்டியுள்ளவற்றைத் தானும் உதறிவிட்டு உறுதியாகச் சென்று குறியை அடைவான்!

நில்லா உலகில் நிலை பெற வேண்டுவான், மனம் நிலைப்பட்டுச்,செயலும் நிலைப்பட்டு "மலையினும் மாணப் பெரிதாதல்" வேண்டுமென்பது நம் அறமாம்!

இப்பணி முகட்டில் வைக்க வேண்டுவார் இன்னும் பலராதல் தோன்றும்! தோன்றின் இணைத்துக் கொண்டு நோக்கல் இனிதாம்! **நேரில் வாழாமல் நெஞ்சில் வாழ்பவரே இங்குச் சுட்டப்பட்டவர்** என்பதைப் படிப்பார் அறிந்து கொள்ளின் சில சிக்கல்கள் எழா! **எதிர் காலத்தில் இடம் பெறுவார் அவர்!**


பனிமலை முகடுகளும் பள்ளத்தாக்குகளும் எழுத்து வடிவில் இருந்து ஆவ தென்ன? நூலுருக் கொண்டு நினைவுருத் தாங்கிச் செயலாக்கம் பெற்றால் தானே பயன்?

பண்பின் கொள்கலமாய்- தமிழ் நெறிக் குறளின் வாழ்வராய் இலங்கும் உடன் பிறப்பர் பொறிஞர் திரு.**க.சுப்பிரமணியனார்**, மருத்துவர் திரு.**க.கோபாலனார்** தம் பெற்றோர் பெயரால் நிறுவிய **அழகம்மாள்-கந்தசாமியர் அறக்கட்டளை**யின் சார்பில் இந்நூல் வெளிப்படுகின்றது. அறக்கட்டளையர் அனைவர்க்கும் நெஞ்சார்ந்த நன்றியுடையேன்!

ஒவ்வொரு குறிப்பும் ஒருதுண்டுத்தாள்! எண்வரிசை மாறாமல்-விடுபாடு இல்லாமல்-கணினிப்படுத்தலும், மெய்ப்புப் பார்த்துச் செப்பம் செய்தலும் அரிய பணியாம். அதனைச் செய்த திருச்சிராப்பள்ளி அச்சுக்குழுமத்தார்க்கும் மெய்ப்புப் பார்ப்பதில் ஆழங்கால்பட்ட அன்பர் அறிஞர் திரு.பி.தமிழகனார்க்கும் நெஞ்சார்ந்த நன்றியுடையேன்.

திருவள்ளுவர் தவச்சாலை
அல்லூர் 620101
திருச்சிராப்பள்ளிமாவட்டம்.

*இன்ப அன்புடன்,*
**இரா. இளங்குமரன்**
*15 ஆனி 2043.*
*(29.06.2012.)*



அழகம்மாள் கந்தசாமி

# பனிமலை முகடுகளும் பள்ளத்தாக்குகளும்

- இயற்கையிலே கருத்தாங்கி இனிமையிலே உருத்தாங்கிப் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தன்னிலை குன்றாமல் உலகில் வாழும் தனிச்செவ்வியல் மொழி தமிழ் ஒன்றே.

★ ★ ★

- பழமைக்கும் பழமையாய்ப் புதுமைக்கும் புதுமையாய்த் தோன்றிய நாள் தொட்டுத் துலங்கிவரும் மொழி தமிழே.

★ ★ ★

- புத்தம் புதுக் கலைகளுக் கெல்லாம் புத்தாக்கச் சொற்களைப் பொருந்தக் காணவல்ல மொழி தமிழே.

★ ★ ★

- "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்பதை எளிமையாய் இயல்பாய் வெளிப்படச் செய்யும் மொழி தமிழே.

★ ★ ★

- சிவனியம் மாலியம் வேதியம் சமணம் பௌத்தம் கிறித்தவம் இசுலாம் என்னும் எல்லாச் சமயங்களுக்கும் நூல் கண்டது தமிழ் மொழி.

★ ★ ★

- இயற்கை வடிவாம் வட்டத்தை உயிர் வரியெழுத்தாக்கிய உணர்வு வளமிக்க புலமையர் நம் தமிழர்.

★ ★ ★

முதுபழங்காலந் தொட்டே நாவாய் வழி உலக வலம் வந்த பரதவர் மலிந்ததால் பரதவர் நாடு எனவும் நாவலம் தீவு எனவும் பெயர் பெற்றது நம் நாடே.

★ ★ ★

உலகின் முதன் மொழியான தமிழுக்கு வாய்த்த இலக்கண நூல்களின் தொகையாக விளங்கும் தொல்காப்பியம், பல்லாயிரம் ஆண்டுப் பழமையது. ஆயினும் இன்றும் வழிகாட்டும் புதுமையது ஆகும்.

★ ★ ★

உலக மொழிகள் அனைத்தும் எழுத்திலக்கணம் சொல்லிலக்கணம் என்னும் இரண்டையே கொண்டிருக்கப் பொருள் இலக்கணம் என்னும் வாழ்வியல் இலக்கணத்தையும் கொண்டது தமிழ்த் தொல்காப்பியம்.

★ ★ ★

ஏட்டு வழக்கு மட்டுமன்றி, நாட்டு வழக்கும் ஆய்ந்து மொழிவளமாக்கிய பெருமையது தொல்காப்பியம். பின்னே வந்த இலக்கண இலக்கிய நூல்களுக் கெல்லாம் கலங்கரை விளக்கமாகி இன்று வரை ஒளி செய்து வருவதும் அது.

★ ★ ★

- நாட்டின் வரம்பு, எழுத்தின் வரம்பு, மொழித் தூய்மை, மொழி வழி வாழ்வியல் காப்பு, புத்தாக்க வழிகாட்டல் என்பவற்றையெல்லாம் அறிந்து போற்றத் தக்க வைப்பகமாக இருப்பது தொல்காப்பியம்.

★ ★ ★

- காலம்தோறும் அறிஞர் பெரு மக்களாகிய இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், கல்லாடர், தெய்வச் சிலையார் ஆகியவர்களால் உரை காணப்பட்டதும், பல்வேறு பதிப்புகளையும் மொழி பெயர்ப்புகளையும், ஆய்வுகளையும் கொண்டதும் தொல்காப்பியம். புத்துரைகள் தோன்றி வர வாய்த்ததும் அது.

★ ★ ★

- உலகுக்கு ஒரு கதிரோன் ஒப்ப உலக அற நூல்களுக் கெல்லாம் தலைமணியாகத் திகழ்வது 'அறம்' எனப்படும் திருக்குறளே ஆகும்.

★ ★ ★

- உலக அரசுக்கு உரிய ஒருநூல் தேர்ந்தெடுக்கப்படும் எனின், 'என்னைத் தேர்ந்தெடு' என ஒளிமுகம் காட்டி நிற்கும் நூல் திருக்குறளேயாகும்.

★ ★ ★

- பழைய உரையாசிரியர்கள் பதின்மரொடு, புத்துரையாளர் மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர்

ஆய்வாளர், பரப்பாளர் எனப் பல்லாயிரவரைக் கொண்டு திகழும் பெருமையது திருக்குறள்.

★ ★ ★

- "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்னும் பெரு நெறியே பேணத் தக்க நெறி என மழை முகிலாகப் பெய்தவர் வள்ளுவ வள்ளல்.

★ ★ ★

- தமிழன் சுருக்கப் பார்வையன் அல்லன் என்பதை உலகறி முழக்க மாக்கியவர் கணியன் பூங்குன்றனார். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது அவர் மணிமொழி. தமிழன் பெருக்கப் பார்வையால் கெட்டு விடக் கூடாது என்பதற்காகத் "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்று அடுத்த அடி கூறியவரும் அவர்.

★ ★ ★

- தலைக் கொடையாளன் என்றால் அவன் தமிழ்க்குமணனே ஆவன். "வாள் தந்தனனே தலை எனக்கீய" என்பது புறநானூறு.

★ ★ ★

- நட்பு என்றால், கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் கொண்ட உயிர் நட்பு ஒன்றே. நடுகல்லாவதற்காகவே ஓடிவந்த நட்பு அல்லவோ அது.

★ ★ ★

- நட்புக்காகக் கடனாற்றுதலே நாட்கடன் எனக் கொண்டு, முற்றாக அந்நட்புக்குத் தம்மை ஈகம் செய்தவர் கபிலரே. பாரிமகளிர்க்குத் 'தந்தை தோழன்' என்றவரும் தம் கடமை முடித்துக் கனல் புகுந்தவரும் அவர். இயற்கையைக் கொஞ்சிக் கொஞ்சிப்பாடிக் குறிஞ்சிக் கபிலர் எனப்பட்டாரும் அவர்.

★ ★ ★

- வில்லாற்றலுக்கு ஈடு இணையில்லா ஒருவன், கொல்லி மலைக் கோமான் வல்வில் ஓரியே! ஊரும் பேரும் சொல்லாக் கொடைஞனும் அவன்.

★ ★ ★

- உலக அமைதிக்கு முதல் பெண்பால் தூதர் என்னும் உரிமைப் பட்டயம் பெறுவதற்கு உரிய பெருமையவர் ஔவையார் எனப்படும் உலகப் பாட்டியார்.

★ ★ ★

- வீரமக்களின் விளைநிலமாகத் தமிழகத்தில் இருந்தவர் காவற்பெண்டு,பொன்முடியார்,ஒக்கூர்மாசாத்தியார் முதலிய மூதின் மகளிர்.

★ ★ ★

- இலக்கியப் படைப்பாளராக அன்றி இலக்கணப் படைப்பாளராகவும் இருந்த மகளிருள் தலைநின்றவர் காக்கை பாடினியார். அவர் இயற்றிய அரிய யாப்பிலக்கண நூல் காக்கை பாடினியம்.

★ ★ ★

- பாராட்டோ பாடு புகழோ கருதாமலும் ஈந்த வள்ளல்கள், பாரியும் பேகனும்! முல்லையும் மயிலும் பாடியோ பெற்றன, தேரும் போர்வையும்?

★ ★ ★

- அமைச்சுக் கட்டில் ஏறத்தக்கார் அறிவறி சான்றோரே என்பதை நிலைப்படுத்தியவர் அரிசில்கிழார். அவர் ஆட்சியை ஏற்காமல், அவர் வழியில் அரசு நடைபெறச் செய்தலே அரசின் கடன் எனச் சீராக்கம் செய்தவரும் அவர்!

★ ★ ★

- நாட்டுநலம், ஏட்டு நலம், ஆட்சிநலம், குடும்ப நலம் எல்லாம் காக்கும் கொள்கைச் சான்றோர்க்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தவர் கோவூர் கிழார்.

★ ★ ★

- புலமையை மதிக்கும் ஆள்வோனே ஆள்வோன் என்பதை நிலை நாட்டியவன் சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை. மோசியார்க்குக் கவரி வீசிய காவலன் அல்லனோ அவன்!

★ ★ ★

- முடிவேந்தன் மகனே எனினும் சான்றோர் தொடர்பு கொள்ளுதலே ஆட்சிச் சால்புக்கு வழிகாட்டும் எனத் தெளிந்தவன், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன். மகன் மணிக்குட்டுவனைப் பரணர் கையில் ஒப்படைத்தான் அல்லனோ!

★ ★ ★

- ஆள்வோன் வாழ்விலும் அறிவர் வாழ்வே உலகுக்கு உயர்பயன் செய்யும் என உணர்ந்து போற்றியவன் வள்ளல் அதியமான். அவனா நெடுவாழ்வு வாழவைக்கும் நெல்லிக்கனி உண்டான்?

★ ★ ★

- குடி தாங்கியாக இருக்கும் ஒப்புரவாளனை முடி தாங்கியரும் மதித்துப் போற்ற வேண்டும் என்பதை நிலை நாட்டியவன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன். சிறு குடிகிழான் பண்ணை நோக்கிச் சென்று பண்ணன் மேல் பாணாற்றுப் படை பாடினானே!

★ ★ ★

- மனச் சான்றினும் உயர்ந்ததாம் மன்றச் சான்று இல்லை என்பதை உலகுக்கு உணர்த்தியவன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன். ஆளும் அவனைக் கொன்றவர் எவர்? அவன் மனச் சான்று தானே!

★ ★ ★

- தொல்பழ வரலாற்றுச் செய்திகளையெல்லாம் வகை வகையாக அடுக்கிக் காட்டிய பெருமையர் பாவலர் பரணர். வரலாற்றுலக வழிகாட்டியார் அவர்!

★ ★ ★

- மக்களை நோக்கி, உங்களால் எவருக்கும் நல்லது செய்ய இயலாதா? போகட்டும். அல்லதாவது செய்யாதீர்கள்! -என்றவர் நரிவெரூஉத் தலையார்.

★ ★ ★

- ஆள்வோன், அயலான் சிறைக்கண் அல்லல் படும் நிலையில், அறிவர் தாழாமல் தம் கடன் புரிவர் என்பதை அறியச் செய்தவர் பொய்கையார். சேரமான் கணைக்கால் இரும் பொறைக்காகக் களவழி நாற்பது பாடியவர்!

★ ★ ★

- மன்னவன் முன்னே எனினும் மானப் புலவன் தாழ்ந்துநில்லான் என்பதை நேரிடையாகக்காட்டியவர் சங்கப் பாவலர் பெருஞ்சித்திரனார்.

★ ★ ★

- "ஈயும் வண்மையர் சிறப்பினும், ஈதலைப் பெற மாட்டேம் என்பார் சிறப்பு மேம்பட்டது" என்றவர் கழைதின் யானையார்.

★ ★ ★

- "நீரைத்தடுத்து நிலத்துக்குப் பயன்படுத்தியவர், தம் வாழ்நாளை ஓடிப்போகாமல் தடுத்து நிறுத்தி என்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர்" என்றவர் சங்கச் சான்றோர், குடபுலவியனார்.

★ ★ ★

- "உழவன் வரிச்சுமையால் ஒழிந்து போகக் கூடாது" என உலகுக்கு உணர்த்தியவர், வெள்ளைக் குடி நாகனார்.

★ ★ ★

- கொள்கைக்காக உண்ணா நோன்பு கொண்ட முன்னோடி கோப்பெருஞ் சோழன்! வடக்கிருந்து உயிரும் விட்டான் அல்லனோ!

★ ★ ★

- நீரைச் சிறைசெய்து நிலவளம் பெருக்கலால் நாட்டுவளம் பெருக்கலாம் என முதன்முதல் உணர்ந்து கல்லணை கட்டியவன் சோழன் கரிகாலன்.

★ ★ ★

- பாரதப் போர் நாளிலேயே களப் போரில் ஈடுபட்ட இருதிறப் படையினருக்கும் வேண்டும், ஊணும் மருந்தும் மற்றை உதவியும் புரிந்த செஞ்சிலுவை ஒப்புரவாளன் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்.

★ ★ ★

- தென்னங்குமரியொடு வடவிமயம்வரை ஒரு மொழி வைத்து உலகாண்டவன் என்னும் பெருமையன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

★ ★ ★

- கற்புடைய மகளிர்க்குக் கற்கோயில் எடுத்து ஏண் நாடும் சேண் நாடும் சிறப்பிக்கச் செய்தவன் செங்குட்டுவன் என்னும் சீர்சால் சேரவேந்தன்.

★ ★ ★

- மொழிக் காப்பாளியாகவும் மொழிப் போராளியாகவும் இருந்தாருள் தலைப்பட்டவர் சங்கத்து நக்கீரனார். தமிழைப் பழித்தானைச் சாவப் பாடியவர் அவர்! நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே என்றவரும் அவர்! (திருவிளையாடல் கதை)

★ ★ ★

- பிறமொழியாரும் தமிழை உணரத் தலைப்பட்டனர் என்பவருள் முதல்வன் ஆரிய அரசன் பிரகத்தன். பின்னே, கிறித்தவம் பரப்ப வந்த பிற நாட்டுப் பெருமக்கள், தாம் கற்ற அளவில் நில்லாமல் அளப்பரும் தொண்டும் செய்து விழிப்புறுத்தியவர்களும் அவர்கள்.

★ ★ ★

- மொழி வளர்க்கப் பாடுபடுவது மக்கள் அனைவர் கடமையுமாம் என்பதைத் தெளிவாக்குவது சங்கச் சான்றோர் வாழ்வு. ஓரிடத்தர் ஒரு தொழிலர் ஒரு காலத்தர் படைப்பா பாட்டும் தொகையும் பிறவும்?

★ ★ ★

- ஆரியம் நன்று தமிழ் தீது என்று, தாய் மொழிக்கேடு புரிந்து தனக்குத் தானே பழியும் அழிவும் தேடிக் கொண்டவன் குயக் கொண்டான் என்பான்!

★ ★ ★

- எல்லா வளமும் இயல்பாய் இருக்கவும் எதுவும் வேண்டா என்னும் துணிவுத் துறவுக்கு எடுத்துக்

காட்டாயவர் இளங்கோவடிகள். கலை நலம் கனியக் காப்பியம் இயற்றிய பெருமையரும் அவர்! உதிரிப் பூக்களை மாலையாக்கிக் காப்பிய இலக்கணம் தந்த முதல்வரும் அவர்.

★ ★ ★

- ஊரை அமுத சுரபியாகக் கொண்டு விளங்கிய முதல் ஒப்புரவாளன் ஆபுத்திரன்; அவன் வழிஞர் மணிமேகலையார்!

★ ★ ★

- சிறைக் கோட்டத்தை அறக்கோட்ட மாக்கியவரும் பவத்திறம் அறுத்துத் தவத்திறம் பூண்டவரும் மணிமேகலையார்.

★ ★ ★

- ஏதிலியரை எடுத்து வளர்த்து ஆளாக்கும் அருட்கடமைக்கு வழிகாட்டியாக நின்ற பெரியார் பெரியாழ்வார்! வளர்க்கப் பெற்ற பேறுடையார் ஆண்டாளார்.

★ ★ ★

- உள்ளம் விரிந்து ஒப்புரவானால் அவ்வுள்ளத்தே இறைவன் உறைவான் என்பது முதலாழ்வார் மூவர் (பொய்கையார், பூதத்தார், பேயார்) வெளிப்படுத்தும்! ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம் என்று இடந்தந்த இறைமையர்.

★ ★ ★

- மந்திரம் என்பது அயன்மொழி மந்திரம் அன்று. தமிழ் மந்திரமே என நிலை நாட்டியவர் திருமூலர். "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறை மொழி தானே மந்திரம் என்ப" என்பது அதன் இலக்கணம் (தொல் 1434)

★ ★ ★

- கருங்கல்லும் கரைந்துருக இறைமையைக் கரைந்து கரைந்து பாடிய கனிவினர் மணிமொழியார். (மாணிக்க வாசகர்) திருவாசகம் ஓதி உணர்க! உணர்ந்து கூறியவர் சிவப்பிரகாசர், வள்ளலார், போப்பையர்!

★ ★ ★

- மொழிபெயர்த்து, 'அதர்ப்பட யாத்தல்' என்னும் தொல்காப்பியரின் ஆணை வழுவாமல் முதற்கண் காப்பியம் யாத்தவர் கொங்கு வேளிர். பின்னர்க் கம்பர்!

★ ★ ★

- மக்கள் தொண்டே இறைவன் தொண்டு எனத் தண்டேந்தும் அகவையிலும் தொண்டேந்தி நின்ற தோன்றல் அப்பரடிகள். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பது அவர் திருவாக்கு.

★ ★ ★

- திருத் தொண்டுக்கே தம்மை யாட்படுத்தித் தம் தம்பியார் உள்ராக வேண்டும் என்பதற்கே அருள் தாங்கி வாழ்ந்தவர் திலகவதியார். அப்பரடிகளாரின் அக்கையார்!

★ ★ ★

- தமிழைத் தம் பெயரோடு சேர்த்துக் கொண்ட தமிழ்ப் பற்றாளருள் தலைமையாளர், தமிழ்ஞான சம்பந்தர் எனப்படும் சீர்காழிப் பிள்ளையார்.

★ ★ ★

- தமிழில் பாடிப் பரவுவதே இறைவனுக்கு இசைந்தது என்பதை நிலைநாட்டியவர் தம்பிரான் தோழராம் சுந்தர மூர்த்தி அடிகளார்.(அருச்சனை பாட்டே ஆகும்)

★ ★ ★

- ஏடெழுதுவார் கையே 'திருக்கை' எனவும், உழுவார் கையே 'திருக்கை' எனவும் வழங்கப்பட்டதற்குச் சான்று திருக்கைக்கோட்டி என்னும் கோயில் முகப்பு மண்டபமும், திருக்கை வழக்கம் எனப்படும் கம்பர் நூலுமாம்.

★ ★ ★

- தமிழக வரலாறு கல்வெட்டு செப்பேடு இன்னவற்றை யெல்லாம் ஆய்ந்து ஆய்ந்து ஊர் ஊருக்கு நேர் நேர் சென்று வரலாற்றுப் படைப்புக் காவியம் ஆகிய பெரிய புராணம் தந்தவர் சேக்கிழார் அடிகள்.

★ ★ ★

- துயர் தீர்ப்பார் எவரோ, அவர் பக்கம் ஊரும் உலகும் நிற்கும் என்பதை நின்ற சீர் நெடுமாறன் வாக்காக வெளிப்படுத்தி ஒளிகாட்டியது பெரியபுராணம். "என்துயர் தீர்த்தார் வென்றார்; யான் அவர் பக்கம் சேர்வேன்" என்பது அவன் வாக்கு.

★ ★ ★

- கல்லைக் கவின் கலைச் செல்வமாகச் செய்த செழுமையர் பல்லவ வேந்தர், சிறப்பாக மாமல்லன் என்னும் மகேந்திர வர்மன்.

★ ★ ★

- முடியாட்சியிலேயே குடியாட்சி கண்ட முற்போக்காளன் தஞ்சைப் பெருவுடையார் கோயில் எடுத்த இராசராசன். அவன் பெயர்களுள் ஒன்று சனநாதன். அப்பெயரால் ஈழத்தில் அமைந்ததோர் ஊர், சனநாதபுரம். (அது அநுராதபுரம்). ஈழந்திரை கொண்டான், கடாரம் கொண்டான் சிங்களாந்தகன் முதலாம் பெயர் பெற்றவனும் அவன்; அவன் மகன் இராசேந்திர சோழன் செயங்கொண்ட சோழபுரக் கோயில் எடுத்தவனும் சோழகங்கப் பேரேரி அமைத்தவனும் ஆவன்.

★ ★ ★

- திருப்பணியோடு ஆட்சிப் பணியை முறையோடு செய்யவும் வழிகாட்டும் பெண்மைச் சான்றாகத் திகழ்ந்தவர் அரசி குந்தவையார்.

★ ★ ★

- இலக்கியப் புரவலர் வழியிலே வந்து தலைப்பட்டு நின்றவர் சடையப்ப வள்ளல். சடையப்பர் கொடைப் பெருக்கே கம்பர் கொடைப் பெருக்காம் இராமகாதை!

★ ★ ★

- தெளிந்தாரிடம் தீமைகாணாத் திருவுள்ளம், கண்டியூர் சீனக்கர் உள்ளமாம். அவரை அப் பெருமைக் குரியவர் ஆக்கியவர் பொய்யா மொழியார்! செல்லக்கிடக்க எனப் படுக்கைகளில் (பஞ்சுப்படுக்கை, அனற்படுக்கை). கூறியவர்.

★ ★ ★

- சுற்றத்தாரைப் பேணுதலால் சுட்டும் பெருமை பெற்றவன் குடிதாங்கி.
  "சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான் பெற்றத்தால் பெற்ற பயன் " என்பது வள்ளுவம்.

★ ★ ★

- சாதி சமயம் காணாச் சால்பினர் சித்தர். உலக நலங் கருதிய உயர் தொண்டர்கள்; அவர்கள் கண்ட மருத்துவம் சித்த மருத்துவம், தமிழ் மருத்துவம், அறிவர் மருத்துவம் எனப்படும். நாடி பார்த்து நலிக்கும் நோய்களை அகற்றுதலில் கைதேர்ந்தவர்கள் அவர்கள். பதினெண்மர் என்பது ஓர் எண்ணிக்கை. ஆனால் மிகப்பலராம். மருத்துவம் சோதிடம் முதலியவற்றை எளிய பாடல்களாக இசைப் பாடல்களாகப் பாடியவர்கள் அவர்கள்.

★ ★ ★

- சாதிமை எண்ணாச் சால்பிலே ஓங்கி அதனைக் கடைப்பிடியாகக் கொண்டிருந்த பெருமையர் இராமாநுசர்; தீண்டார் எனப்பட்டவரைத் தம் தோளில் தாங்கிய திருவாளர் அவர்!

★ ★ ★

- குழந்தை இலக்கியத்தை நெடிய நாள்களுக்கு முன்னரே சிந்தித்து ஆத்தி சூடி, கொன்றை வேந்தன் என ஆக்கியவர் பிற்கால ஔவையார்.

★ ★ ★

- வெண்பாப் பாடுதலில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத புகழ் பெற்றவர் புகழேந்தியார். அவர் பாடியது நளவெண்பா.

★ ★ ★

- வண்ணம் பாடுதலுக் கென்றே வாய்த்த பிறவியர் அருணகிரியார். அவர் பாடிய வண்ணப் பாக்கள் ஆயிரக் கணக்கின. நூல் திருப்புகழ்.

★ ★ ★

- இரட்டுறல் என்னும் சிலேடை பாடுதற்கென்றே பிறந்த பிறவியர் காளமேகம்!

★ ★ ★

- தொல்காப்பிய மூலத்தை முதற்கண் உரை கண்டு சாவா வாழ்வு தந்தவர் இளம்பூரண அடிகள் என்னும் உரையாசிரியர்.

★ ★ ★

- திருக்குறள் மூலத்தை முதற்கண் உரைகண்டு காத்த பெருமையர் மணக்குடவர்.

★ ★ ★

- மெய்யியல் கொள்கைகள் எல்லாவற்றையும் கையில் கனியாகக் காட்டுவதும், சமயப் புனைவின்றிச் சால்பு ஓங்குவதும் மெய்கண்டார் கண்ட சிவஞான போதச் சீர் நூலாகும்.

★ ★ ★

- அருங்கலைச் செல்வங்களின் வைப்பகமாகத் திகழ்வது சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரை.

★ ★ ★

- தமிழிலக்கண இலக்கியப் பரப்பை அறியச்செய்யும் அருமைப் பேருரை யாப்பருங்கல விருத்திக் குணசாகரர் உரை.

★ ★ ★

- ஒப்பாரும் மிக்காரும் இல்லா வகையில் பராபரக் கண்ணி இசைத்தவர் தாயுமானவர்.

★ ★ ★

- மொழி பெயர் தேயமாம் காசி சென்று மொழியறியா அரசனையும் தம் மொழித் திறத்தால் வயப்படுத்தித் தமிழ் மடம் உருவாக்க இடம் பெற்றவர் கொழுந்தமிழ்க் குமரகுருபர அடிகள்.

★ ★ ★

- எளிமையும் இனிமையும் கொஞ்சும் வகையில் இறைமைப் பாடல் பாடித் தமிழ்வளம் செய்தவர்

வள்ளலார். ஒளிவழிபாடே உலகுய்யும் வழிபாடு என்று நிலை நாட்டிய ஒளியரும் அவரே.

★ ★ ★

- வள்ளலார் பாடல்களையெல்லாம் சிந்தாமல் சிதறாமல் காத்து அச்சியற்றித் தமிழ் வளமாக்கிய பெருமையர் தொழுவூர் வேலாயுதர்.

★ ★ ★

- தமிழிலக்கிய வகைகளை எண்ணி எண்ணிப் பாடிப் பெருக்கியவர் வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள்.

★ ★ ★

- தமிழின் தனிப் பெருஞ்சிறப்புகள் இவை இவை என எடுத்துக் காட்டி நிறுவியவர் தென்மொழி வடமொழி வல்ல தவ முனிவர் சிவஞான முனிவர்

★ ★ ★

- தமிழிசை மும்மூர்த்திகள் எனப்பட்டவர் முத்துத் தாண்டவர், மாரிமுத்தாப் புலவர், அருணாசலக் கவிராயர் என்பார். இம்மூவரும் சீர்த்தனை (கீர்த்தனை) பாடுதலில் சீர்த்தியர்.

★ ★ ★

- நாட்டுப்பாடல்கள், தொழில் வகையாலும் தாலாட்டாலும், ஒப்பாரியாலும் வளர்ந்தன. பழமொழி, விடுகதை முதலியனவும் யாப்பியல் அமைந்தவையே. இவை

பெரிதும் தாய்மார் வளர்த்த தமிழ் எனத்தக்கவை. கும்மி கோலாட்டம் வில்லடி முதலியனவும் மக்கள் இலக்கியமாம் மாண்பினவை.

★ ★ ★

- அகராதிக் கலையை உருவாக்கிச் சதுரகராதி, கொடுந்தமிழ் அகராதி, செந்தமிழ் அகராதி, இலத்தீன் தமிழகராதி முதலிய அகராதிகளை ஆக்கியவர் வீரமாமுனிவர்.

★ ★ ★

- தமிழின் தனித்தன்மையும், திரவிட மொழிகளுக்குத் தாயாம் சிறப்பையும் தம் ஒப்பிலக்கண நூலால் முதற்கண் நிலை நாட்டியவர் அறிஞர் கால்டுவெலார்.

★ ★ ★

- பிற மொழிக் கலப்புப் பெருகிநின்ற நாளில், ஒரு சொல் தானும் பிறசொல் கலவாமல் பாவும் உரையுமாய் நூல் இயற்ற முடியும் என்பதை முதற்கண் நிலைநாட்டியவர் பாம்பன் குமர குருதாசஅடிகள். அவர்கள் இயற்றிய நூல், சேந்தன் செந்தமிழ்

★ ★ ★

- விடுதலைப் போருக்குத் தம்மை விலையாகத் தந்து இறக்கும் போதும் தாங்கள் முள்ளால் கீறியதும் சொல்லால் கூறியதும் மாறாது காக்க வேண்டிக் கொண்டவர் மான வீரர் மருது பாண்டியர்.

★ ★ ★

- முதன்முதலாக ஏட்டில் இருந்து திருக்குறளை அச்சில் பதிப்பித்தவர் நெல்லை அம்பலவாண கவிராயர் (1812).

★ ★ ★

- 1812ஆம் ஆண்டிலேயே திருக்குறளை மொழிபெயர்த்து உரைவரைந்தும், திருவள்ளுவர்க்குப் பொற்காசு வெளியிட்டும், அரிய கலைச் செல்வங்களை யெல்லாம் தொகுத்தும் தொண்டாற்றிய பெருந்தகை எல்லீசு!

★ ★ ★

- திராவிடர் கழகம் தோன்று முன்னரே, தமிழகத்திலே திருவிடர் கழக மென ஒன்றை நிறுவித் தனித்தமிழ் நலமும் தமிழாய்வும் மேற்கொண்டவர் விருதை சிவஞான யோகிகள் (19.11.1908)

★ ★ ★

- அருமை மிக்கதும் பழமை வாய்ந்ததுமாம் தமிழ் உரைநடை வளம் காட்ட ஒப்பதும் மிக்கதும் இல்லா ஒரு நூல்,இறையனார் களவியல் உரை. அதன் ஆசிரியர் நக்கீரனார் என்னும் பெயரினர் எனப்படுகின்றார்.

★ ★ ★

- குறவஞ்சி முதலாகப் பன்னூல் இயற்றிக் குறவஞ்சி மேடு என நிலக் கொடையும் பெற்றவர் பெரும் புலவர் மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர்.

★ ★ ★

- தம் அறக் கட்டளையால் உயர்பள்ளிகள் கல்லூரி ஆகியவை அமைத்ததுடன் தஞ்சையில் சரசுவதிமால் என்னும் நூலகத்தை உருவாக்கி ஓலைச் சுவடிகளைத் தொகுத்துக் காத்தவரும், பதிப்புகள் பல வெளியிட அடிப்படையாக இருந்தவரும் மன்னர் சரபோசி ஆவர்.

★ ★ ★

- செத்தும் கொடுத்த வள்ளல் சீதக்காதி என்னும் பெயர் கொண்ட வள்ளல் நெல்லும் பொன்னும் ஒப்பவிற்கும் காலத்தும் தட்டாமல் ஈந்தவர். படிக்காசுப் புலவர் அவரைப்பற்றிப் பாடிய பாடல் தேன் சொட்டுவதாம்.

★ ★ ★

- தமிழ்க் கோயிலாக விளங்குமாறு பழந்தமிழ் ஏடுகளைத் தொகுத்து வைத்தவர் மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர்.

★ ★ ★

- நெல்லை ஈசுவரமூர்த்தியார், நெல்லையப்பக் கவிராயர் என்பார் தொகுத்து வைத்த ஏடுகள் மலைக்க வைப்பன. பழந்தமிழ்க் கொடையாகத் திகழ்ந்தவை.

★ ★ ★

- கிறித்தவக் கம்பர் எனப் பாராட்டப்படும் என்றி ஆல்பிரெட்டு கிருட்டிணர் இரட்சணியப் பெயரால் செய்த பாவிகங்கள் கிறித்தவம் பெற்ற பேறு மட்டுமன்று;

தமிழன்னைக்கு வாய்த்த கொடையுமாம்.

★ ★ ★

- சீறாப்புராணம் இயற்றிய உமறுப் புலவர் கொடை சமயக் கொடையொடு தமிழ்க் கொடையுமாம்.

★ ★ ★

- நடமாடும் பல்கலைக் கழகமாக விளங்கி நாடெல்லாம் தமிழ்க் கல்வி வளர்த்து, புலவர் பரம்பரையை உருவாக்கிய மாபெரும் பாவலர் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரர்.

★ ★ ★

- நகைச் சுவை தவழப் புனைகதை வரைதலிலும், சமயச் சால்பிலும், பெண் கல்வி பெண்ணுரிமை என்பவற்றைப் போற்றுதலிலும் சிறந்து விளங்கிய பிற்கால முன்னோடி மாயூரம் வேத நாயகர்.

★ ★ ★

- பழந்தமிழ்ச் சங்கம் போல் பல்லாற்றானும் சிறந்த செந்தமிழ்ச் சங்கம் கண்டவர் பாலவ நத்தம் குறுநில மன்னர் பாண்டித் துரையார். அவர்க்கு உறுதுணையாய் நின்றவர் சேதுபதி பாற்கரர் (1901)

★ ★ ★

- "பல்கலைக் கழகப் பயிற்று மொழியாகப் பைந்தமிழே திகழ வேண்டும்" என்று செல்லுமிடமெல்லாம் சொல்லிய வரும் செந்தமிழ் வளர்ப்புக் கென்றே தமிழ்க் கல்லூரி நிறுவியவரும் கரந்தை உமா மகேசுவரனார்.

★ ★ ★

- தமிழ்ப் பிறப்பு ஒன்று எப்படியெல்லாம் துணிவொடும் திறத்தொடும் பாடுபட்டு மீட்டெடுப்புச் செய்ய வேண்டும் என்பதைத் தம் செயற்பாடுகளால் நிலை நாட்டியவர் பன்னீர்ச் செல்வர்.

★ ★ ★

- தமிழ் நாடக மீட்பின் விளக்கமாக மனோன்மணியம் இயற்றியவர் பேராசிரியர் பெ.சுந்தரனார்.

★ ★ ★

- ஆசியத் துணைக் கண்டத்திலேயே முதன்முதலாகத் தொழிலாளர் அமைப்பைக் கண்டு அறுபதுக்கு மேற்பட்ட தொழிற் சங்கங்களுக்குப் பொறுப்பு ஏற்றுத் தமிழ்த் தென்றலாய், சமயச் சால்பராய், சீர்திருத்தராய் விளங்கியவர் திரு.வி.கலியாணசுந்தரர். இணைந்து நின்ற பெருந்தகை சிங்கார வேலர்.

★ ★ ★

- முதன்முதலாகத் தமிழில் மொழி நூல் எழுதிய பெருமகனார் மாகறல் கார்த்திகேயர்.

★ ★ ★

- பகுத்தறிவராய்- தொழில் தொண்டராய் - தாழ்த்தப் பட்டவரை விழிப்புறுத்தி மேலெழுப்பும் மேதையாய்த் திகழ்ந்த வாழ்நாள் தொண்டர் அயோத்தி தாசு பண்டிதர்.

★ ★ ★

- முதன் முதலாகத் தமிழ் மொழி வரலாறு எழுதிய பெருமையர் பரிதிமால் கலைஞர் (சூரிய நாராயண சாத்திரியார்).

★ ★ ★

- பழந்தமிழ்ப் பயிற்சியே 'தமிழ்ப் பயிற்சி' என்பதைத் தூண்டித் துலக்கிச் சிந்தாமணி முதலிய நூல்கள் அச்சில் வெளிப்பட அடிமூலமாகத் திகழ்ந்தவர் சேலம் 'முனிசீப்' இராமசாமியார்.

★ ★ ★

- "பழந்தமிழ் நூற் பதிப்புக்குக் கால்கோள் செய்தவர் ஆறுமுகநாவலர்; சுவர் எழுப்பியவர் சி.வை.தாமோதரர்; முகடு வேய்ந்து அழகுபடுத்தியவர் உ.வே.சாமிநாதர்" என்றவர் - திரு.வி.க.

★ ★ ★

- விடுதலை என்பது நாட்டுக்கு மட்டுமன்று! மொழிக்கும் விடுதலை வேண்டும் என்பதை நிலை நாட்டியவர் பெரும் பாவலர் பாரதியார்.

★ ★ ★

- தாய் தன் குழந்தையைத் தாலாட்டிக் கொஞ்சுவது போலத் தமிழன்னையை ஊனாய் -உயிராய்க் கொண்டு பாடித்திளைத்தவர் தமிழியக்கம் கண்டவர் பாவேந்தர் பாரதிதாசனார்.

★ ★ ★

- வாணிகத்தால் நாட்டைப் பிடித்தவரை வாணிகத்தால் ஓட்டலே உரிய முறை என வழிகாட்டிய முதன்மை வீரர் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரே.

★ ★ ★

- வடமொழிக் கலவையில் எழுதுபவராகத் தாம் இருந்தும், தம் சிவனிய மாணவர் மறைமலை யடிகளின் தனித்தமிழ் நடையைப் பாராட்டி அதனை விடாது பற்றிக் கொள்ள ஏவிய பெருந்தகை சைவசித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகர்.

★ ★ ★

- "நல்ல சமயம் நாத்திகம் வெறாது" என்னும் நயத்தகு கருத்துக்கு வாழ்வியல் விளக்கமாகத் திகழ்ந்தவர் நற்றமிழ்க் கொண்டல் ஞானியார் அடிகள்.

★ ★ ★

- திருவருட்பா திருவருட்பாவே என்று நிலை நாட்டியவருள் ஒருவரும் தமிழ் வல்ல புலமையொடு நூறு கவனமும் (சதாவதானம்) செய்ய முடியும் என்பதை முதற்கண் நிலை நாட்டியவரும் செய்கு தம்பிப் பாவலர்.

★ ★ ★

- தமிழ் வாழ்வாகவே திகழ்ந்து தமிழகம் காணாத வகையில் ஏகபாத நூற்றந்தாதி என்னும் நூலைப் படைத்து முதற்பாடலுக்கு மட்டும் ஒரு நூறு பொருள் தந்தவர் பெரும்புலவர் சோழவந்தான் அரசஞ் சண்முகனார்.

★ ★ ★

- தனித்தமிழ் இயக்கம் கண்டு குமரித்தமிழின் கொழுமையை நிலை நாட்டியவர் நிறைமலையாம் மறைமலையடிகளே (1916).

★ ★ ★

- முதன்முதல் வேர்ச் சொல் ஆய்விலே தலையிட்டு நடையிட்டவர் ஈழத்து ஞானப்பிரகாச அடிகள்.

★ ★ ★

- வடசொல் கலப்பை நீக்கும் வகையில் வடசொல் தமிழ் அகராதியைத் தந்தவர் மறைமலையடிகளார் மகளார், திருவரங்க நீலாம்பிகையார்.

★ ★ ★

- மாணவர்க்கெனத் தமிழ்மன்றம் அமைத்து நாடறி பொருளாக்கியவர் மயிலை சிவமுத்து.

★ ★ ★

- தொல்காப்பியரே மீளத் தோன்றிப் பழுப்பு (காக்கி) உடையில் காவல் துறைப் பதவியில் இருப்பதாக

விளங்கித் தொல்காப்பியத்தில் ஏற்றப்பட்ட மாசுகளைச் சூறைக்காற்றில் சுழல் துரும்பாகப் பறத்தியவர் மன்னார்குடி சோம சுந்தரனார்.

★ ★ ★

- பொறியியல் வல்லாராய், தமிழ்வல்லாராய், கலைச் சொல்லாக்கத் தேர்ச்சியராய் விளங்கப் பெற்றவர் பாகல்பட்டி குறுநிலவேள் வே. மாணிக்கர்.

★ ★ ★

- தமிழ்ப் புலவர்க்குப் புலவராகவும், புரவலராகவும், தமிழ்ப்பாட நூல் வெளியீட்டாளராகவும், வித்துவான் பட்டத்தை உருவாக்கு முன்னோடியாகவும் விளங்கியவர் கடலகம் கா.நமச்சிவாயர்.

★ ★ ★

- உரைகாணல் ஆகாது என ஒதுக்கிய திருவாசகத்திற்கு உருக்கும் உரைவரைந்து இறைநலம் பெருக்கியவர் பண்டிதமணி மு.கதிரேசர்.

★ ★ ★

- உயிர்ப்பலி நீக்கத்திற்காகத் தம் உயிரையும் பொருட்டாக எண்ணாது உழைத்த உறுதியாளர் உயிரிரக்கர் சீர்ப்பால் அவர்கள்.

★ ★ ★

- பாரதிக்கு முன்னர் நாட்டுவிடுதலைக்குப் பாட்டுப் பாடியவர் பாற்கரதாசர். ஆங்கிலியர் அந்தாதி என ஆங்கிலேயர் தீமை ஒழியப் பாடியவர் வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள்.

★ ★ ★

- தமிழில் முதல் கலைக்களஞ்சியம் என்னும் வகையில் அபிதான சிந்தாமணி ஆக்கியவர் ஆ.சிங்கார வேலர். வெளியிட்டவர் பொன். பாண்டித்துரையார்.

★ ★ ★

- விரிவுமிக்க தமிழிசை நூலைத் தமிழ் மண்ணுக்குத் தந்த பெருந்தக்க இசைவல்லார் ஆபிரகாம் பண்டிதர். நூல் கருணாமிர்த சாகரம்.

★ ★ ★

- யாழ் பற்றி விரிவாக ஆராய்ந்து பெருநூல் ஆக்கிய பெருமையர் விபுலானந்த அடிகள்.(யாழ் நூல்)

★ ★ ★

- நாடகக் கலையே வாழ்வாகக் கொண்டுஅதிலேயே முழுதுற ஈடுபட்டுத் தொண்டாற்றிய நாடகத் தந்தை பம்மல் சம்பந்தர்.

★ ★ ★

- காவல் துறை ஆணையராக விளங்கியும் அருந்தமிழ் நூல் பதிப்பிலும், அரியதோர் நூலக அமைப்பிலும் ஈடுபட்டவர் பவானந்தர்.

★ ★ ★

- தமிழ் நாடகத் தலைமையாசிரியர் என விளங்கியவர் தவத்திரு. சங்கரதாசர்.

★ ★ ★

- ஆங்கிலம் வல்ல சட்டப் பேரறிஞராய் இருந்தும், தமிழ்க் 'கா.சு'வாய்த் திகழ்ந்து முதன்முதல், தமிழ் இலக்கிய வரலாறு எழுதியவர் கா.சுப்பிரமணியனார்.

★ ★ ★

- உலகத் தமிழரெல்லாம் ஒன்று பட்டுத் தமிழ்வளர்க்க வேண்டும் என்று உலகத் தமிழ் மாநாடு கூட்டியவர் தனிநாயக அடிகளார்.

★ ★ ★

- தமிழ்நாடு என்னும் பெயர் சூட்ட வேண்டும் என்பதற்காகத் தம்முயிர் ஈந்த தகவாளர் விருதை, சங்கரலிங்கனார்.

★ ★ ★

- மாநிலப் பிரிவினையின் போது தமிழக எல்லைப் பகுதியின் மண் சுரண்டப்படுதலைத் தடுத்து நிறுத்த வரிந்து கட்டி நின்று திருத்தணி காத்த ஏந்தல் மங்கலங்கிழார்.

★ ★ ★

- தமிழர்கள் இழக்க இருந்த நாஞ்சில் பகுதிகளை மீட்டுத் தந்த பெரும் போராளி நேசமணியார்!

★ ★ ★

- எரிமலையே எதிரிட்டு நின்றாலும் தமக்குச் சரியெனத் தோன்றிய கருத்தைச் செம்மாந்துரைத்த சீர்த்தியர், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார்.

★ ★ ★

- தமிழே திரவிடத்தின் தாய்; தமிழே ஆரியத்தின் மூலம்; தமிழே உலக முதன் மொழி; தமிழனே உலக முதல் மாந்தன்; தமிழன் தோன்றிய இடம் மறைந்த குமரிக் கண்டமே- என்பவற்றை முழுமையாக மெய்ப்பித்தவர் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர்.

★ ★ ★

- உரைஇன்றி இருந்த குறுந்தொகைக்கு உரைகண்டு முதற்கண் பதிப்பித்தவர், சோழவந்தான் வாழ்வினர், திருக்கண்ணபுரம் சௌரிப் பெருமாள் அரங்கனார். வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரிப் பேராசிரியர்.

★ ★ ★

- உரை இல்லாத நற்றிணைக்கு முதற்கண் உரைகண்ட பெருமையர் பின்னத்தூர் நாராயணசாமியர்.

★ ★ ★

- தொல்காப்பியத்தை இணையில்லா வகையில் பல்வகைக் குறிப்பு விளக்கம் அமைப்பு ஆகியவற்றில் இன்றும் போற்றப் பதிப்பித்தவர் புன்னாலைக் கட்டுவன் சி.கணேசர்.

★ ★ ★

- முதன் முதலாகத் திருக்குறள் எண்கவனகராகவும், திருக்குறள் அமைப்புகளை ஏற்படுத்திப் பரப்பு நராகவும் திகழ்ந்தவர் தி.ப.சுப்பிரமணிய தாசு.

★ ★ ★

- அரசியல் நூல்களை அருமையாய்ப் பெயர்த்துத் தரப் பிறந்த பிறவி, வெ.சாமிநாதர் பிறவி.

★ ★ ★

- வரலாற்றுப் புதினம் வரையவே வந்த பிறப்பு, கல்கியின் பிறப்பு.

★ ★ ★

- சங்க இலக்கியப் பதிப்பு, நிகண்டு, புறத்திரட்டு முதலிய பதிப்புகளில் இணையற்று விளங்கியவர் வையாபுரியார்.

★ ★ ★

- ஆங்கில அரசுக்கு எதிராகப் போரிட்ட முதல் உரிமை வீரன் ஆங்கிலேயர் கையில் இருந்த இடத்தையும் பறித்தவன் பூலியன்.

★ ★ ★

- ஆங்கிலேயரை எதிர்த்த வீரப் பெண்மணி வேலுநாச்சியார், சிவகங்கை அரசி.

★ ★ ★

- சிந்து - என்றால் முந்து வந்து நிற்பவர் அவரே! காவடிச் சிந்து பாடிய சென்னிகுளம் அண்ணா மலையார்!

★ ★ ★

- மதுரைக் கோயில் பணி, தெப்பக்குளப்பணி, திருமலை மால் முதலியவை செய்து விழாநகர் ஆக்கியவர் மன்னர் திருமலையார்.

★ ★ ★

- சாலையெல்லாம் சோலையாகச் செய்த பெருமையர் இராணி மங்கம்மாள்.

★ ★ ★

- சிவக் கோலமே தவக்கோலமாக இருந்துகொண்டும் விவிலியத்தைத் தமிழாக்கிய பெருமையர், பிழையிலாப் பதிப்பு எனின் அவர் பதிப்பே எனப் பதிப்பித்தவர் ஆறுமுக நாவலர்.

★ ★ ★

- பிறந்த மண்ணுக்குத் (இங்கிலாந்துக்கு) தம் முதுமையில் சென்ற நாளிலும், தமிழை மறவாமல் தாழ்மையுள்ள தமிழ் மாணவன் எனத் தம் கல்லறையில் பொறிக்க விரும்பிய பேருளத்தர் சி.யு.போப்.

★ ★ ★

- உலக அறநூல்களில் தலைமணியாகத் திகழ்வது திருக்குறளே எனப்பறை சாற்றியவர் அருளாளர் ஆல்பிரட் சுவைட்சர்.

★ ★ ★

- குடியிருந்த வீட்டை விற்றும் மருத்துவ அகராதி அச்சிட்டு வெளியிட்டவர் தஞ்சை மருத்துவர் ச.சாம்பசிவனார்.

★ ★ ★

- தமிழில் கற்பிக்கக் கலைச் சொல் இல்லை என்பார் தலைகவிழ, தலைச் சுமை கொள்ளாத அளவு தமிழில் மருத்துவ நூல்களைக் காட்டிய முது பெரும் புலமையர் வெள்ளக்கால் ப.சுப்பிரமணியர். ஈழத்தில் வாழ்ந்த மருத்துவர், தந்தை கிரீன் என்பார் படைத்த படைப்புகள் அவற்றில் மிகுதி.

★ ★ ★

- அறப்பணிக்காகக் கோடி கொடுத்த கொடைஞர் குடியிருந்த வீடும் கொடுத்த ஏந்தல் எனத் திகழ்ந்தவர் அழகப்பர்.

★ ★ ★

- இரண்டாம் அகவையிலே பார்வையை இழந்தாலும் நாடெல்லாம் சுற்றித் தமிழ் வளர்த்தவரும் சீட்டுக் கவிப் பிறப்பாகத் திகழ்ந்தவரும் பழனி மாம்பழக் கவிச் சிங்க நாவலர்.

★ ★ ★

- பெரியபுராண நூலுக்கு மிக விரிவான தோர் உரையை முழுதுறக் கண்டு செப்பமாகப் பதிப்பித்த பெரியவர் சி.கே.சுப்பிரமணியனார்.

★ ★ ★

- நல்ல தமிழில் நகைச்சுவை ததும்ப எழுதமுடியும் என்பதை நாடறியச் செய்த நயத்தக்க எழுத்தாளர் க.ப.மகிழ்நனார். (க.ப.சந்தோசம்)

★ ★ ★

- ஒரு பல்கலைக் கழகம் செய்ய வேண்டிய பெரும்பணியாகிய தேவார திருவாசகச் சொல்லடைவு பொருளடைவுப் பணியைத் தாம் ஒருவராக இருந்து ஒப்பாரும் மிக்காரும் இல்லாவகையில் செய்து முடித்தவர் தணிகைமணி செங்கல்வராயர்.

★ ★ ★

- தமிழைத் துறவாத துறவியாக என்றும் திகழ்ந்து உரையும் பாட்டுமாகப் பன்னூறு நூல்களைப் படைத்துப் பாடும் பறவையாக உலகவலம் வந்த பாவலர் பாரத சக்தி மாகாவியம் கண்ட ஓகி சுத்தானந்த பாரதியார்.

★ ★ ★

- இளம்பருவத்திலேயே உரிமைப் போருக்குத் தம்மை ஈகம்புரிந்து தமிழச்சியின் தகவை நிலைநாட்டிய பெருமையர் தில்லையாடி வள்ளியம்மை.

★ ★ ★

- இந்திய நாட்டின் இணைப்பு மொழியாக இருக்கத் தக்கது தமிழே என்று தில்லி நாடாளுமன்றத்தில் முழங்கியவர் காயிதே மில்லத்து.

★ ★ ★

- குமரிக் கண்டத்தில் இருந்து இந்திய வரலாறு எழுதப்பட வேண்டும் என்னும் உண்மையைத் தம் எழுத்தால் நிலை நாட்டியவர் வி.ஆர்.இராமச்சந்திரர்.

★ ★ ★

- திருவள்ளுவர் திருநாட்கழகம் என ஓர் அமைப்பைத் தோற்றுவித்து அரும்பணி செய்தாருள் தலைமையரும் கலைச் சொல்லாக்கப் பெயர்ப்பு வல்லாருமாகத் திகழ்ந்தவர் காழி சிவ.கண்ணுசாமியார். உருவாக்கியவர் சைவசித்தாந்தக் கழக அமைச்சர் வ.சுப்பையா வேள்.

★ ★ ★

- உரையாளர்களால் மாசுபடுத்தப்பட்ட தொல்காப்பிய உரையைச் சீர்தூக்கி யாய்ந்து தமிழ் நெறிச் செம்மைக்குத் துணிந்து கடனாற்றியவர் நாவலர் ச.சோமசுந்தர பாரதியார்.

★ ★ ★

- சொல்லின் சுவையை எழுத்திலும் பேச்சிலும் நிலைப்படுத்தியவர் சொல்லின் செல்வர் இரா.பி. சேது.

★ ★ ★

- தமிழர் தமிழ் மண்ணில் தோன்றியவரே என்னும் தொன்மை வரலாற்றை மெய்யுற உணர்ந்து நிலை நாட்டியவர் பி.டி.சீனிவாசர்.

★ ★ ★

- பன்முறை படிப்பாரும் ஒருங்கே நினைவில் வைத்துக் கொள்ள இயலாக் குறிப்புகளையெல்லாம் ஒருங்கே திரட்டிப் பல்லவர் வரலாறு எழுதிய பெருமையர் மா.இராசமாணிக்கனார்.

★ ★ ★

- தென்னாட்டுப் போர்களையெல்லாம் வரிசைப் படுத்தி உழைப்பு மிக்க ஒப்பிலா நூலை ஆக்கியவர் பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார்.

★ ★ ★

- மறைந்து போன தமிழ் நூல்கள் இவை இவை என விளக்கம் தந்து தமிழர் ஏடுகாத்தலில் விழிப்புற ஏவியவர் மயிலை சீனி. வேங்கடசாமி.

★ ★ ★

- தமிழ்த் திரை உலகில் பகுத்தறிவு வித்தினை ஊன்றியவரும் மேடைத் தமிழுக்கு மேன்மை வழங்கியவரும் 'தமிழ் நாடு' எனப் பெயர் சூட்டியவரும் தமிழ்முறைத் திருமணங்கள் எல்லாமும் சட்டப்படி ஏற்கும் என நிறைவேற்றியவரும் பேரறிஞர் அண்ணா.

★ ★ ★

- தமிழ்ப் பேரறிஞராய் விளங்குவாரும் தமிழில் புனைகதை எழுதி வெற்றி கொள்ள முடியும் என்பதை நிலை நாட்டியவர் முனைவர் மு.வரதராசனார்.

★ ★ ★

- பைந்தமிழே பயிற்று மொழி என்பதற்காக நடைத்திட்டம் மேற்கொண்டு, பதவி பறிக்கப்பட்டுச் சிறையில் வாடிய செம்மல் தமிழரிமா சி.இலக்குவனார்.

★ ★ ★

- தமிழ்வழிக் கல்வியை இயக்க மாக்கித் தலைமை தாங்கி நடத்தியவர் வள்ளுவம், தமிழ்க்காதல் கண்ட மூதறிஞர் செம்மல் வ.சுப.மாணிக்கனார்.

★ ★ ★

- பாவாணர் அறிவுக் கொடையைத் தமிழ்மண் தட்டில்லாமல் பெற வாய்த்தவர் தாமரைச் செல்வர் சைவ சித்தாந்தக் கழக அமைச்சர் வ.சுப்பையா.

★ ★ ★

- பாவாணர் அறிவுக் கொடையைத் தமிழுலகம் பெறுதற்குப் பெரும் பரப்பாளியாகத் திகழ்ந்தவரும் தென் மொழித் தாளிகை கண்டவரும் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

★ ★ ★

- தமிழ்- தமிழர்- தமிழினம் என்னும் மும்மையும் ஒருங்கே விடுதலை பெறுவதே தமிழர்க்கு விடுதலை என்னும் குறிக்கோளில் தோன்றியதே உலகத் தமிழ்க் கழகம் என்னும் உ.த.க.

★ ★ ★

- திருக்குறள் 1330-க்கும் எடுத்துக் காட்டுத் தந்து அரும்பெரும் விளக்கமும் வரைந்து பதிப்பித்தவர் கவிராச பண்டித செகவீர பாண்டியனார்.

★ ★ ★

- தென்னிந்தியத் தமிழ்ச் சங்கம் நிறுவியும் தனித் தமிழ்க் கலைச் சொல் ஆக்கம் புரிந்தும் அரிய தொண்டு செய்தவர் முதுபெரும் புலவர் இ.மு.சுப்பிரமணியனார்.

★ ★ ★

- ஓவியக் கலை வல்லாராய் இருந்து நாட்டுப் பணிக்குத் தம்மை ஒப்படைத்து விடுதலைப் பாடல்கள் முழங்கி அரசவைப் பாவலராகவும் விளங்கியவர் நாமக்கல் வெ.இராமலிங்கனார்.

★ ★ ★

- இவ்வளவு நினைவாற்றலா? என எவ்வெவரும் மலைக்கச் சமய நூற் பாடல்களை வரப்படுத்தியவரும் நாவன்மையரும் திரு முருக கிருபானந்த வாரியார்.

★ ★ ★

- பிழையில்லாமல் எழுத, கவிஞராக முதலாம் கருவி நூல்கள் செய்தவரும் பைந்தமிழ்ப் பாவலருமாகத் திகழ்ந்த அயராத் தமிழ்த் தொண்டர் அ.கி.பரந்தாமனார்.

★ ★ ★

- பன்னிரு திருமுறை வரலாறு, தொல்காப்பியம் ஆகிய அரியநூல்களை இயற்றிய புலமைச் செல்வர் க.வெள்ளைவாரணர்.

★ ★ ★

- ஏற்றமிக்க தோற்றப் பொலிவாலும் வீறார்ந்த மொழிப் புலமையாலும் மதுரைத் தமிழ் வளமாகத் திகழ்ந்தவர்பெரும் புலவர் கார் மேகனார்.

★ ★ ★

- அரிய பெரிய தொகுப்பாக ஆங்கிலத் தமிழ்ப் பரகராதி இயற்றியவர் முனைவர் சிதம்பரநாதனார்.

★ ★ ★

- தேவதாசி வழக்கத்தை ஒழித்துப் பெண்ணின் பெருமை காத்தவர் பெருந்தகை முத்துலக்குமியார்.

★ ★ ★

- சென்னைப் பல்கலைக் கழகத் தலைவராய் விளங்கிச் சங்கநூற் கொடையை விரல் நுனியில் கொள்ள ஆய்வுப் பொருளாக்கி அரிய பெரிய பணிசெய்தவர் முனைவர் ந.சஞ்சீவியார்.

★ ★ ★

- சங்கப் புலவர் பெயரமைதியைப் பொருளாகக் கொண்டு ஆய்வுப் பட்டம் பெற்று அதனை அச்சிட்டு அணிகலமாக்கிய அருமையர் முனைவர் மொ.அ.துரையரங்கனார்.

★ ★ ★

- கலைக்கதிர் இதழ் நடத்திப் பல்துறைப் பல்லாயிரம் கலைச் சொற்களைத் தொகுத்துத் தமிழ் வளமாக்கிய தோன்றல் கோவை. தாமோதரனார்.

★ ★ ★

- சங்க இலக்கியங்களை ஓடிய ஓட்டத்தில் எளிமையாகப் படித்து எவரும் மனங்கொளச் செய்தவரும் சுவைமிக்க பொழிவரும் ஆகியவர் கி.வா.சகந்நாதனார்.

★ ★ ★

- சோலைமலையில் ஆறாம் படைவீடு தோற்றுவித்தும் பாடு புகழ் பெறுவித்தும் மதுரை மாநகர் பற்றிய அரியநூல் எழுதியும் அறநெறி அண்ணலாகத் திகழ்ந்தவர் மதுரை கி.பழனியப்பனார்.

★ ★ ★

- கற்றவர்களை உயர்ந்தெழுந்து பறக்கவைக்கும் நூல்களைப் படைத்தவர் - நூற்படைப்பே வாழ்வாகக் கொண்டவர் அப்துற் றகீம் ஆவர்.

★ ★ ★

- நட்ட நடுவயதுக்கு முன்னரே நகைச் சுவையும் நறுக்குத் தெறிப்பும் கமழப் புரட்சிக் கதைகளைப் புதுப்புதுவதாய்ப் படைத்தளித்தவர் புதுமைப்பித்தனார்.

★ ★ ★

- திரைப்படங்களில் நடித்து நகைச் சுவையால் நாட்டு நலம் ஆக்க முடியும் என்பதை நிலைநாட்டியவர் கலைவாணர்.

★ ★ ★

- திரைப்படத்தில் பொதுவுடைமைக் கருத்துக்கள் பொலியும் வகையில் பாடி வழிகாட்டியவர் பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்.

★ ★ ★

- பழந்தமிழ்க் கருவூலங்களைத் திரையுலகப் பாடலாக வழங்கிப் புகழ் பெற்றவர் கவிஞர் கண்ணதாசன்.

★ ★ ★

- குழந்தை இலக்கியத்திற்குப் பெரும் பங்களிப்புச் செய்தவர் கவிமணியும், அழ.வள்ளியப்பாவும்.

★ ★ ★

- தமிழில் கலைக் களஞ்சியம் உருவாக்குதலைத் திட்டமிட்டுச் சீரிய வகையில் நிறைவேற்றியவர் அவிநாசிலிங்கனார். திருக்குறளைப் பள்ளியுள் புக வைத்தவரும் அவிநாசியாரே.

★ ★ ★

- திருக்குறளை நம்மறை எனக் கண்டு நடை நூலாக்கப் பாடுபட்டவர் ஈரோடு வேலா அரசமாணிக்கனார்.

★ ★ ★

- சிவனியமடம் திருக்குறள் வகுப்பு நடத்தும் என்றும், திருக்குறள், பட்டி மண்டபப் பொருளும் ஆம் என்றும், சீர்திருத்தமும் பகுத்தறிவும் தொண்டும் சமயம் சார்ந்தனவே என்றும் நிறுவிக் காட்டியவர் தவத்திரு குன்றக்குடி (அருணாசல தேசிக) அடிகளார்.

★ ★ ★

- பகுத்தறிவுப் படைப்பாகத் தம் படைப்புகளை ஆக்கி ஓயாது ஒழியாது பரப்பிய கொள்கை வீறுடையவர் சாலை - சாலினியர்.

★ ★ ★

- பதிப்பித்த நூலையும் ஏட்டுப்படியொடும் ஒப்பிட்டு ஆய்ந்தும், நயவுரை புத்துரை முதலியவை கண்டும் சிறந்த தொண்டாற்றியவர் உரைவேந்தர் ஒளவை சு.துரைசாமி; பேரளவுக்குச் சங்க இலக்கியக் கொடைஞரும் அவர்.

★ ★ ★

- உரைகாணவே பிறந்த பிறவி எனப் புலமைப் படிப்புப் படித்தும் புலமைப்பணி செய்யாது பழந்தமிழ் உரைப்பணியே புரிந்தவர் பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார்.

★ ★ ★

- உரையில்லா அகநானூற்றுக்கு அரிய உரைகண்டவர் நாவலர் ந.மு.வேங்கட சாமியாரும் கரந்தைக் கவியரசு வேங்கடாசலனாரும் ஆவர்.

★ ★ ★

- சிலப்பதிகார இசைத் திறத்தை மீட்டெடுக்கக் கூடும் என்னும் நம்பிக்கை ஊட்டியவர் பண்ணாய்வு வித்தகர் குடந்தை சுந்தரேசனார். பின்னே வீ.ப.கா.சுந்தரனார்.

★ ★ ★

- தொல்காப்பியர் காட்டிய மெய்ப்பாட்டியலை மெய்ப்படக் காட்டும் நடிப்பு வல்லாராக விளங்கியவர் வி.சி.கணேசனார்.

★ ★ ★

- கம்பன் புகழைக் கலைச் சுவையோடு பெருகப் பரப்பியவர் கம்பன் அடிப்பொடி சா.கணேசனார்.

★ ★ ★

- கல்வெட்டு வரலாறு எனத் தம்மை முற்றாக ஒப்படைத்து உழைத்து உண்மை கண்டவர் தி.வை.சதாசிவனார்.

★ ★ ★

- மேலை நாட்டுக்கும் சென்று தமிழ் நாடகச் சிறப்பை மேடையேற்றிய பெருமையர் தெ.பொ.கிருட்டிணசாமிப் பாவலர்.

★ ★ ★

- திருக்குறளுக்கு உரைக்களஞ்சியம் கண்டு திருக்குறள் உரைக் கொத்து உரைவேற்றுமை தொல்காப்பிய உரைக் களஞ்சியம் என்பன வெளிப்பட வழிகாட்டிய பெருமையர் பெரும்புலவர் தண்டபாணி தேசிகர்.

★ ★ ★

- தமிழிசை வளர்ச்சிக்கும் பரப்புதலுக்கும் அருங்கடமை செய்தவர் அண்ணாமலை அரசர். அண்ணாமலைப் பல்கலைக்கழக நிறுவனரும் அவர்.

★ ★ ★

- தமிழ்க்காப்பும் சிவனெறிக் காப்பும் நோக்காகி, பெரும்புலவர் மீனாட்சி சுந்தரனார், சிவஞான முனிவர், மயிலேறும் பெருமாள், சங்கர நமச்சிவாயர், ஈசானதேசிகர் முதலாய பெருமக்களைப் புரந்ததுடன் தாமும் தமிழ்வளம் செய்த தலைவர்களைக் கொண்டது திருவாவடு துறைத் திருமடம்.

★ ★ ★

- தமிழர் கலைச் சிறப்புகளை மேலையரும் உணர்ந்து மதிக்கச் செய்தவர் ஆனந்த குமாரசாமி.

★ ★ ★

- மருத்துவக் கல்வியைத் தமிழில் தரமுடியும் என்பதை நூலாக்கியும் கற்பித்தும் வெற்றி கண்டவர் தந்தை கிரீன் என்பார். (அமெரிக்கர்: ஈழப்பணியர்)

★ ★ ★

- தொல்காப்பியத்தை முதன்முதல் ஏட்டில் இருந்து பெயர்த்து நூலாக்கம் செய்தவர் மழவை மகாலிங்கர்.

★ ★ ★

- பார்ப்பனர் அல்லாதார்க்கு உண்டுறை விடுதியுடன் கூடிய கல்வி நிலையம் நிறுவ வேண்டுமெனத் தம் வேட்கையை எழுதி வைத்தவர் பாற்கர சேதுபதி (நாட்குறிப்பு).

★ ★ ★

- கம்பனில் தோய்ந்து நின்று அதன் எதிரிடையாகக் காப்பியம் இயற்றிய பகுத்தறிவுப் பாவலர் புலவர் குழந்தை ! நூல் இராவண காவியம்.

★ ★ ★

- திருக்குறளை முற்றாகக் கல்வெட்டு ஆக்கியவர். சலவைக் கல்லில் ஆக்கியவர். திருப்பனந்தாள் அருள் நந்தித் தம்பிரான் அடிகள். மதுரைத் திருக்கோயில் 22.4.1956.

★ ★ ★

- திருக்குறளை ஓவியக் காட்சிகளாக்கிப் பரப்பியவருள் குறிப்பிடத் தக்கவர் பாலு உடன் பிறந்தார்.(பாலு சகோதரர்)

★ ★ ★

- அயராப் பம்பரமாய்ச் சுழன்று அருந்தமிழ் நலம் பரப்பியவர், தமிழகப் புலவர் குழு அமைத்தவர், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவ நாதர்.

★ ★ ★

- நாம் தமிழர் இயக்கம் கண்டு தமிழர் என்னும் முகவரியை அன்றித் திராவிடமுகவரி கொள்ளல் தமிழ் முகவரி யாகாது என நல்ல தொடக்கம் செய்தவரும் தமிழ் இதழைத் தமிழர் எளிதாய்ப் படிக்கலாம் என இதழ்ப் பணி செய்தவரும் சி.பா.ஆதித்தனார்.

★ ★ ★

- திருத்தணியை இன்று நினைத்தாலும் முன்னுறத் தோன்றும் தோன்றல், தமிழரசுக் கழகம் எனக் கழகம் கண்டு சிலம்பும் வள்ளலாரியமும் எழுத்தாலும் சொல்லாலும் பரப்பிய பெருமையர் ம.பொ.சிவஞானம்.

★ ★ ★

- ஆந்திரமும் கருநாடகமும் கேரளமும் பிரிந்த பின்னரும் தமிழகமாக ஏன் பெயர் பெறவில்லை என்றும், உயர்பள்ளியில் பயிற்று மொழியாக இருந்த தமிழ் ஏன் கல்லூரியில் இடம் பெறவில்லை என்றும் தமிழ் ஆட்சி மொழி உடனே ஆதல் வேண்டுமென்றும் சட்ட மன்றத்தில் முதன் முதல் முழங்கியவர் பசும் பொன்னார்.

★ ★ ★

- பேராயத் தொண்டும் பொதுவுடைமைத் தொண்டும் பிறவி நோக்கென உழைத்த முழுதுறு அரசியலாளி, சாதி சமயச் சடங்குகளைச் சுட்டெரித்த அரிமா, தமிழ்ப்பரப்பாளி. இப்படி ஒருவர் வாழ்ந்தாரா என இன்றும் எண்ணவைக்கும் ஏந்தல் தோழர் சீவா.

★ ★ ★

- பொறியின்மை யார்க்கும் பழியன்று என்ற குறளால் தட்டி எழுப்பப்பட்டுக் கவனகக் கலை வல்லாராய்த் திருக்குறளையே கவனகப் பொருளாகக் கொண்டு அரும் பெரும் தொண்டாற்றிய தோன்றல் பெ.இராமையனார்.

★★★

- வாழ்நாளெல்லாம் திருக்குறளைப் பரப்புதலே வாழ்வாகக் கொண்டு திருக்குறள் ஆய்வும் பொழிவுமாக வாழ்ந்தவர் திருக்குறள் முனுசாமி.

★★★

- சென்னையைத் தமிழகத் தலைநகராக இருக்க உறுதிப்பிடியாக இருந்து நிலைநாட்டியவர் பேரறிஞர் இராசாசி.

★★★

- மூடிய பள்ளிகளையெல்லாம் திறக்கச் செய்து மேலும் கல்விக் கூடங்கள் ஆக்கியவரும் நண்பகல் உணவுத் திட்டம் ஏற்படுத்திச் செயல் பட வைத்தவரும் பெருந்தலைவர் காமராசர்.

★★★

- என்ன இழப்பானாலும் குடிகெடுக்கும் குடியை ஒழித்தே தீருவேன் என்று துணிவாக மது வொழிப்புச் செய்த தோன்றல் ஓமந்தூர் இராமசாமியார்.

★★★

- கலைக் களஞ்சியம் என்னும் அரிய பெரிய பயன் மிக்க பார்வை நூலைத் தமிழில் பெரிதும் உழைத்து அருமையாய் ஆக்கிப் படைத்த அயரா உழைப்புச் செம்மல் பெ. தூரன்.

★ ★ ★

- தமிழால் முடியும் என எழுதியவரும் ஆட்சி மொழிச் சட்டம் கொண்டு வந்தவரும் அமைச்சர் சி.சுப்பிரமணியனார்.

★ ★ ★

- அமைச்சுப் பதவி ஏற்கு முன் இருந்த நிலை - வாழ்வியல் - செல்வம் - பண்பு - என்பவை அப்படியே கூர்மழுங்காமல் வாழ்ந்த பெருந்தகைத் தொண்டர் கக்கனார்.

★ ★ ★

- திருக்குறள் பீடம் மதுராந்தகத்தில் அமைத்தும், அரிய ஆய்வு நூல்கள் பலபடைத்தும் தனித்தமிழ்க் காவலராய் அழகரடிகளாய்த் திகழ்ந்தவர் பாலசுந்தரமாய், இளவழகராய் இருந்தவர் ஆவர்.

★ ★ ★

- பாடல்களைப் பாடிப் பாடியே நயமும் சுவையும் காண வேண்டுமே யன்றி உரைநடைபோல் படித்து விடுதல் ஆகாது என்னும் கொள்கையில் வாழ்ந்து அதற்கென வட்டத் தொட்டி என ஓர் அமைப்பை அமைத்தவர் இரசிகமணி எனப்படும் தி.கே.சிதம்பரனார்.

★ ★ ★

- தமிழ்ப் பல்கலைக்கழக முதல் துணை வேந்தராய்ச் செவ்விய சீரிய முழுதுறுபணிகள் ஆற்றியவரும் திரவிடப் பல்கலைக் கழகம், உலகத் தமிழ் மாநாடு என்பவற்றைக் கண்டவரும் முனைவர் வ.அய்.சுப்பிரமணியனார்.

★ ★ ★

- கலை வாழ்வே தம் வாழ்வென நிலைப்படுத்திக் கட்டடக் கலை இசைக் கலை முதலாம் பலப்பல கலை நூல்களை யாத்துத் தமிழுலகுக்கு வழங்கிய வண்மையர் சாத்தன்குளம் அ.இராகவனார்.

★ ★ ★

- வரலாறு, இசை, சிவனியம், பதிப்பு என்பவற்றை முழுதுறு நாளும் செய்தற்கே பிறந்த பிறவியாகத் திகழ்ந்தவர் திருச்சிற்றம்பலம் மு.அருணாசலம் அவர்கள்.

★ ★ ★

- தம் படைப்பு நூல்களோடு பிறர் படைப்பு நூல்களும் செவ்விதில் உலாவப் பெருவாழ்வு முழுவதும் செலவிட்ட மூதறிஞர் உழைப்புச் செம்மல் மே.வி.வேணுகோபாலர்.

★ ★ ★

- செவிப்புலம் அறவே அற்றுப் போன நிலையிலும் இருநூறுக்கு மேற்பட்ட அரிய கருவி நூல்களைத்

தொகையாக்கியவர் கருப்பக்கிளர் சு.அ.இராமசாமிப் புலவர்.

★ ★ ★

- அரசுப்பணியில் இருந்து அருந்தமிழ் ஆய்வாளியாய் முதற்குறள் உவமை, நெடுநல் வாடை ஆய்வு முதலாம் நூல்களை அருமையாக இயற்றியவர் இசைப் புலமையர் கு.கோதண்டபாணியார்.

★ ★ ★

- ஆடு மாடு மேய்க்கும் சிறுவர்களும் அருமையாகத் திரையிசைப் பாடல்களைப் பாடுமாறு இசைக் குயிலாக ஏழிசை மன்னராக விளங்கியவர் தியாகராச பாகவதர்.

★ ★ ★

- குரல்வளம் என்றாலும், நடிப்பு என்றாலும் ஒப்பனைத் தோற்றம் என்றாலும் ஒருமுறை கண்டாரும் மறவாத் திரை விறலியார் கே.பி.சுந்தராம்பாள்.

★ ★ ★

- எட்டுமணி நேரம் பத்துமணி நேரம் பார்த்தாலும் அரங்கை விட்டு வெளியேற விருப்பம் வராத வகையில் நடிப்பும் ஒப்பனையும் காட்சிமாற்றமும் உரையும் பாட்டும் விரவிய இயலும் அமைந்தது நவாப் இராசமாணிக்கம், “மதுரை தேவி பால கான சபா நாடகம்.”

★ ★ ★

- தமிழுக்கென்று தஞ்சையில் ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவியவரும், உலகத் தமிழ்ச் சங்கமென மதுரையில் நிறுவ முனைந்தவரும் திரு. ம.கோ.இராமச்சந்திரனார்.

★ ★ ★

- தேர்ந்து தேர்ந்து அரிய தலைப்புகளில் தமிழ்வளப் பொருளாக நூல்களை எழுதத் தூண்டிக் குறுகிய காலத்தில் பெரிய பணி செய்தவர் பேரா.முனைவர் ச.மெய்யப்பனார்.

★ ★ ★

- உலகமெலாம் தமிழ் இசையும் கூத்தும் பரவச் செய்யும் பணியில் ஈடுபட்டுக் கலைக் காவிரி என்னும் நிறுவனத்தைத் தோற்றுவித்து உலகெலாம் பரப்பி, அந்நிலை தொடரும் வகையில் ஆக்கத் தொண்டு செய்த கலைத் தோன்றல் 'சார்ச்சு' அடிகளார்.

★ ★ ★

- இலக்கிய இலக்கணப் புலமை சான்றவரும் நினைவாற்றலில் நிகரில்லாதவரும் இலக்கண விளக்கம் முதலாம் பதிப்புகள் செய்தவரும் இலக்கணப் பேரகராதி படைத்தவரும் பண்டித, வித்துவான் தி.வே.கோபாலனார்.

★ ★ ★

## இணைப்பு

ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேறி மணிவிழாக் கொண்டாடும் 60 ஆண்டுகள் ஆகிய பின்னரும்,

ஆட்சி மொழி தமிழாக வில்லை.

கல்வி மொழி தமிழாக வில்லை.

முறைமன்ற மொழி தமிழாக வில்லை.

கோயில் வழிப்பாட்டு மொழி தமிழாக வில்லை.

குடும்பச் சடங்குகளாகிய திருமணம் மணிவிழா மனைபுகுவிழா முதலியவை தமிழாகவில்லை.

இசை மொழி தமிழாக இல்லை.

திரைப்படங்கள் தொலைக்காட்சிப் படங்கள் மொழிக் கேடு செய்யும்அளவுக்கு எல்லை இல்லை.

தமிழர் முகவரியாம் பெயர் தமிழாகஇல்லை.

குடும்ப உரையாடல்களிலும் இருந்த தமிழும் இல்லை.

தமிழ்ப் பள்ளிகள் மூடப்பட்டுக் கொண்டே வருகின்றன.

இருந்த புலவர் கல்லூரிகளை மூடிக் கலைக்கல்லூரிகள் ஆக்கப்பட்டு விட்டன.

பாட அளவில் இருக்கும் அரசுப் பள்ளிகளிலும் பல்லாயிரம் தமிழாசிரியர்கள் இடம் காலியாகவே உள்ளன.

தெருக்கள், சாலைகள் ஆகியவற்றில் உள்ள வணிக நிறுவனங்கள் தொழிலகங்களில் தமிழ்ப் பெயர் இல்லை!

தமிழால் ஆட்சிக் கட்டில் ஏறியவர்கள் -“ எங்கும் தமிழ் எதிலும் தமிழ்” என்று இன்றும் முழங்குபவர்கள் ஆட்சியின் அலங்கோலங்களே இவை!

ஆதலால், உலகக் கணிப்பில் ஒரு நூற்றாண்டுக்கு மேல் உயிர் வாழாத மொழிப் பட்டியலில் தமிழ் உள்ளமை, 'பள்ளத்தாக்குகளின்' குறும் பட்டியலாம்!

தமிழ்க் கேடராய் ஆள்பவர், கல்விக் கொள்ளையர், கலைக் கொள்ளையர், கோயில் கொள்ளையர் ஆகியோர்க்கு இது படையலாம்.

- உலகின் முதன் மொழியான தமிழுக்கு வாய்த்த இலக்கண நூல்களின் தொகையாக விளங்கும் தொல்காப்பியம், பல்லாயிரம் ஆண்டுப் பழமையது ஆயினும் இன்றும் வழிகாட்டும் புதுமையது ஆகும்.

★ ★ ★

- உலக மொழிகள் அனைத்தும் எழுத்திலக்கணம் சொல்லிலக்கணம் என்னும் இரண்டையே கொண்டிருக்கப் பொருள் இலக்கணம் என்னும் வாழ்வியல் இலக்கணத்தையும் கொண்டது தமிழ்த் தொல்காப்பியம்.

★ ★ ★

- ஏட்டு வழக்கு மட்டுமன்றி, நாட்டு வழக்கும் ஆய்ந்து மொழிவளமாக்கிய பெருமையது தொல்காப்பியம். பின்னே வந்த இலக்கண இலக்கிய நூல்களுக் கெல்லாம் கலங்கரை விளக்கமாகி இன்று வரை ஒளி செய்து வருவதும் அது.

★ ★ ★

- தமிழே திரவிடத்தின் தாய்; தமிழே ஆரியத்தின் மூலம்; தமிழே உலக முதன் மொழி; தமிழனே உலக முதல் மாந்தன்; தமிழன் தோன்றிய இடம் மறைந்த குமரிக் கண்டமே- என்பவற்றை முழுமையாக மெய்ப்பித்தவர் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர்.